# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 160/63 — 1975 අප්‍රේල් 23 වැනි බදාදා — 1975.04.23

160/63 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 23 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I) — பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*1975 இன் இல. 194/1*

*ச.அ.எண் : சீ. 333(III)/75*

*1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியல் அமைப்பின் 101 ஆம் பிரிவின்படி, பின்வரும் நியமனங்களைச் செய்வதில் சனாதிபதி அவர்கள் மகிழ்ச்சியடைகின்றார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—*

| | |
|---|---|
| *1. நீர்ப்பாசன, மின்சக்தி, பெருவீதிகள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு. மைத்திரிபால சேனநாயக்க, அவர்கள்.* | *பிரதம மந்திரியும் பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி சிறிமாவோ ஆர். டயஸ் பண்டாரநாயக்க அவர்கள், தற்போதைய வெளிநாட்டுப் பயணத்திலிருந்து இலங்கை வந்தடையும்வரை, 1975 ஏப்பிரில், 23 ஆம் திகதியிலிருந்து தமது கடமைகளுடன் பிரதம மந்திரியாக பதிற்கடமையாற்றக் கடவர்.* |
| *2. பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஜயகொடி ஆராச்சிகே லக்ஸ்மன் ஜயக்கொடி அவர்கள்.* | *பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி சிறிமாவோ ஆர். டயஸ் பண்டாரநாயக்க அவர்கள், தற்போதைய வெளிநாட்டுப் பயணத்திலிருந்து இலங்கை வந்தடையும்வரை, 1975 ஏப்பிரில் 23 ஆந் திகதியிலிருந்து பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக பதிற்கடமையாற்றக் கடவர்.* |
| *3. திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ரத்ன தேசப்பிரிய சேனநாயக்க அவர்கள்.* | *திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும், அமைப்புத்திட்டச் செயற்படுத்தல் அமைச்சருமான திருமதி சிறிமாவோ ஆர். டயஸ் பண்டாரநாயக்க அவர்கள், தற்போதைய வெளிநாட்டுப் பயணத்திலிருந்து இலங்கை வந்தடையும் வரை 1975 ஏப்பிரில் 23 ஆந் திகதியிலிருந்து திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் அமைச்சராகவும், அமைப்புத்திட்டச் செயற்படுத்தல் அமைச்சராகவும் கடமையாற்றக் கடவர்.* |

*அதி உத்தமரின் ஆணைப்படி,*

*எச். சீ. டி. விஜேசிங்க,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதியின் அலுவலகம்,*
*கொழும்பு,*
*1975 ஏப்பிரில் 23.*

*4-554*

*1975 இன் இல. 194/2*

*ச.அ.எண் : சீ. 335(III)/75*

*1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்பின் 103 (1) ஆம் பிரிவின்படி, திறைசேரிப் பிரதிச் செயலாளராகிய திருவாளர் எல். பி. அபயரத்தின, அவர்களை, தமது கடமைகளுடன் 1975 ஏப்பிரில் 22 ஆம் திகதியிலிருந்து நிதி அமைச்சின் செயலாளரும் திறைசேரிச் செயலாளருமாகிய திருவாளர் சீ. ஏ. கூரே, அவர்கள், இலங்கை வந்தடையும் வரை, நிதி அமைச்சின் செயலாளராகவும் திறைசேரிச் செயலாளராகவும் பதிற் கடமையாற்றும்படி சனாதிபதி அவர்கள் மகிழ்ச்சியுடன் நியமித்தமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அதி உத்தமனாரின் ஆணைப்படி,*

*எச். சீ. டி. விஜேசிங்க,*
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதியின் அலுவலகம்,*
*கொழும்பு, 1975 ஏப்பிரில் 22.*

*4-555*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.